RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21311

OPEN ACCESS



# விவிலியமும் சித்தர் பாடல்களும் சுட்டும் குரு கோட்பாடு

**ச.சு. அருள்பிரகாஷ் [அ,*], பொ. சுரேஷ் [அ]**

[அ] மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Portrayal of Guru in Bible and Siddhar Literature

**C.S. Arulprakash [a,*], P. Suresh [a]**

[a] Department of Philosophy, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India.

* Corresponding Author: rev.cs.arulprakash@gmail.com

Received: 08-06-2021
Revised: 13-07-2021
Accepted: 15-07-2021
Published: 26-07-2021

Check for updates

**ABSTRACT**

Both in the History of Tamil Literature and Tamil Religions thinking Research emphasis the teachings of siddhars in the prime place. Theywere great in the field of medicine, chemistry, astrology, astronomy there also very skilled in the art of mandharas and Yogas. Through their songs revealed the 'Guru' concept and this Guru concept of the Bible very hand in a hand. Siddhars emphasis that a real or true 'Guru' must be God himself and he need to born as a man and teach the followers a good way the same teaching also found in the Bible. Jesus God himself born as a 'Guru' and thought his students or followers the eternal way of or path of eternal life.

**Keywords:** God, Guru, Siddhar, Jesus, Bible

## ஆசிரியர் குறிப்பு



**ச.சு. அருள்பிரகாஷ்**, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறையில் 2018 ஆம் ஆண்டு முதல் முனைவர் பொ. சுரேஷ், உதவிப் பேராசிரியர் அவர்களின் நெறியாளுகையின் கீழ் "விவிலியம் மற்றும் சித்தர் பாடல்களில் மெய்யியல் கோட்பாடுகள் ஓர் ஒப்பாய்வு" என்னும் தலைப்பில் பகுதி நேர முனைவர் பட்ட மாணவராக ஆய்வு செய்து வருகின்றார். தற்போது திருச்சபைக் குருவாகவும், கூடலூர் Blue Mountain Christian Academy, இல் உதவிப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ் பக்திச் சிந்தனைகளிலும் தனி இடத்தைப் பிடித்தவர்கள் சித்தர்களேயாவர். மருத்துவம், இரசவாதம், சோதிடம், வானியல், போன்ற கலைகளிலும் மந்திரம், தந்திரம், குண்டலிணி யோகப் பயிற்சி களிலும் பேராற்றல் படைத்தவர்கள். மேலும் இவர்கள் பக்தி நெறிசார்ந்த புரட்சிகரமான கருத்துக்களைத் தம் இலக்கியங்களில் படைத்துள்ளனர். அவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுவது 'குரு' கோட்பாடு ஆகும். அதனை தமிழ் இலக்கியங்களோடு இரண்டறக் கலந்துள்ள விவிலியம் குறிப்பிடும் 'குரு' கோட்பாட்டோடு ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குரு சொல் விளக்கம்

'கு' என்றால் அஞ்ஞானம், இருள், பாவம். 'ரு' என்றால் ஒழிப்பவர், அழிப்பவர் என்று பொருள்படும். மேலும் வேர்ச் சொல்லாகிய 'குரு' என்ற சொல் விளங்குதல், விளங்க வைத்தல் என்றும் விளக்கம் பெறுகிறது. குரு சத்து, அசத்து, சதசத்து ஆகிய மூன்று பொருள்களின் இயல்பையும் நன்கு உணர்ந்தவர். மனிதப் பிறவியைப் பரம்பொருளுடன் சேர்த்து வைக்கப் பாடுபடுபவரே தக்க குரு ஆவார். இந்தப் பிறவிப்பிணி தொடராமல் இருக்க குருவின் திருவருள் தேவை. அதனால் தான் முன்னோர்கள் குருவருளின்றித் திருவருள் வராது' என்று கூறியுள்ளனர் (Sivakanthan). நம் சீவாத்துமா என்னும் குட நீரைப் பரமாத்மா என்னும் கடலில் சேர வழி காட்டுபவரே தக்க குரு ஆவார். ஆகவே குரு என்பவர் தனது சீடனின் அறியாமையைப் போக்கி அருள் ஒளி கொடுப்பவர். சீடர்களுக்குச் சந்தேகமின்றி உணர்த்தும் ஆற்றலைப் பெற்றவர் குருவின் அருளால் சீடனின் வினைகள் நீங்குகின்றன. ஏற்கனவே செய்த வினைகளால் வரும் தீமையும் சீடனை அணுகுவதில்லை. குருவின் அருள் இறைவன் அருளுக்கு இணையானது.

## குரு கருத்து வளர்ச்சி

'குரு' இந்தியப் பண்பாட்டின் ஓர் அடையாளம் என்பர் சௌபி. 'இக் குருக்களே இந்தியப் பண்பாட்டின் பெருமையை விளக்கும் சமய மெய்யியல்களை அருளியவர்கள்' என்று கூறுவர்.' (Mc Muller, The Concept of Guru in Indian Religion). மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சிறப்புடைய நால்வரில் குரு சிறப்பிடம் பெறுகிறார். ஏனெனில் நன்மை, தீமை போன்றவைகளை சீடர்களுக்கு எடுத்துக் கூறி அறிவைத் தெளிவாக்கி முன்னேற்றத்திற்கு வழிகாட்டினபடியால் குரு மதிப்புறு நிலையில் காணப்படுகிறார். ஆகவே 'குரு' என்ற கருத்து வளர்ச்சி குடும்பங்கள் தோன்றிய காலத்திலிருந்தே வழக்கில் இருந்திருக்க வேண்டும் எனலாம்.

## விவிலியம் காட்டும் குரு

மூவொரு கடவுளின் இரண்டாம் நபரான மைந்தன் இயேசு கிறிஸ்து என்ற மெய்க் குருவின் வழியாக மட்டுமே இறைவனைக் கண்டடைய முடியும் என விவிலியம் கூறுகிறது. 'இயேசு என்ற கிரேக்கப் பெயரும் 'குரு' என்ற தமிழ்ச் சொல்லும் ஒரே பொருளைக் கொண்டதாகும்.' (Sathu chellappa, 1985) உலகில் பாவ இருளை நீக்கி 'குரு' உபதேசம் செய்தார். கிறித்து பெருமானை 'சற்குரு', 'பரமகுரு' என்றும் கூறுவர். 'கிறித்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்', 'இப்போது கிறித்து தலைமைக் குருவாக வந்துள்ளார்' (Thiruviviliam, 2013). மேலும் இறைவாக்கினர், ஆசாரியன், மேய்ப்பன், போதகர், ஆசிரியர் போன்ற சொற்கள் விவிலியத்தில் 'குரு' என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவனோடு மனிதனை ஒன்றிணைக்கும் உறவுப் பாலமாக குரு செயல்படுகிறார் என விவிலியம் கூறுகிறது.

## சித்தர்கள் முன்னிருத்தும் குரு

குருவின் வழியாக மட்டுமே பரம்பொருளாகிய இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள முடியும் என்பதே சித்தர்களின் போதனை. மேலும் இறைவன் குருவாக வந்து கற்பித்தாலொழிய மானிடர் பிறவிப் பயனை எய்த முடியாது என்பர். 'குரு' தம் பார்வையால், எண்ணத்தால், செயலால், அனுபவத்தால், தமது போதனையால் மட்டுமின்றி எடுத்துக் காட்டாலும் சொல்வாக்கினாலும் அதிகாரம் பெற்றவராய் மற்றவர்களுக்கும் இறைவனை பற்றி அறிவித்து அவர்களையும் தன் நிலைக்கு உயர்த்தக்கூடிய திறமையாலும் உதவுகிறார். 'குருவின் கண்டிப்பும் அரவணைப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. குரு என்பவர் பாமரர்களுக்கும் பரிந்து உதவக்கூடியவர், குழந்தைகளோடு இருக்கையில் அவர் ஒரு குழந்தை. எளியோருக்கு இரங்குபவர், கோழைகளையும் வீரனாக்குபவர். வாழ்வில் துன்பப்படுகிறவர்களுக்கு வாழ வழிகாட்டுவார். குரு கற்பிப்பவர் மட்டுமின்றி அதன்வழி

தானே நடந்தும் காட்டுவார். அவரே வழிநடத்தியும் செல்வார். உலகத்தார்களுக்கு ஒளி தருபவரும் அவரே.' என குருவைப் பற்றி சித்தர்கள் முன்மொழிகின்றனர்.

## சித்தர் பாடல்களில் விவிலியத்தின் தாக்கம்

கி.பி 34 இல் யூத நாட்டில் துளிர்விட்ட கிறித்தவம் உலகின் பல பாகங்களுக்கும் பரவியது. அந்த வகையில் இயேசு பெருமானின் 12 சீடர்களுள் ஒருவரான 'புனித தோமா தமிழ் மாகானத்திற்கு நற்செய்தியைப் பரப்ப கி.பி. 52 இல் தென்னிந்தியாவிற்கு வந்தார்.' (Beth Walpole, 1993) இக்கருத்தை வலுப்படுத்த 'தென்னகத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே 30 லட்சம் கிறித்தவர்கள் வாழ்ந்தார்கள் என சுவாமி விவேகானந்தர் 'ஞான தீபம்' என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். தற்கால வெளியீடுகளில் இச்செய்தி மறைக்கப்பட்டுள்ளது.

மேலும் திருவள்ளுவர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார் என அறிஞர்கள் கூறுகின்றனர். அத்தருணத்தில் 'இயேசுதாசரான தோமான் முனிவர் மைலாப்பூரில் மாதா கோயில் கட்டி சமயோபதேசஞ் செய்து கொண்டிருந்தார். வள்ளுவர் பைபிளையும் கேட்டிருக்கிறார்' (Deivanayagam, 1970). இதன் வழி தோமாவின் பரப்புரையில் வள்ளுவர் தாக்குறவு கொண்டிருந்தார் என அறியமுடிகிறது. மேலும் திருக்குறளில் அமைந்துள்ள ஐந்தவித்தான், வான்சிறப்பு, நீத்தார் பெருமை, மூவர் போன்ற செய்யுள் களில் கிறித்தவக் கோட்பாடுகள் எதிரொலிப்பதைக் காணலாம். கி.பி 5 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த திருமூலரைக் கொண்டு சித்தர்களின் மரபு தொடங்குகிறது என்பர். இத்தரவுகளின் வழி நோக்கின் சித்தர் பாடல்களிலும் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் விவிலியக் கோட்பாடுகள் இரண்டறக் கலந்துள்ளதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

## விவிலியம் மற்றும் சித்தர் பாடல்களில் குரு கோட்பாடு

குருவின் வழியாகவே இறைவனை அடையமுடியும் என்பது விவிலியத்தின் கருத்தாகும். இக்கருத்தையே சித்தர்கள் பலரும் குருவின் வழியாகவே பரம் பொருளை அடைய முடியுமெனக் கூறியுள்ளனர். பின் வரும் அகத்தியர் பாடல்,

'வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாநிலத்தை யொருநொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்திற் தானுதித்துக் குருவாய் வந்து
சனமான சமுசாரமும் ஒன்றில் லாமற்
சன்னியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்டதலம் சென்றவரை அண்டு வாயே' (Mohan, 1995)

மேற்கண்ட அகத்தியர் ஞானம் 23 வது பாடல் அது குறிப்பிடும் செய்திகள் இயேசு பெருமானுக்கே பொருந்தி வருவதாகக் கருதத்தக்கன. இப்பாடல் இயேசு பெருமானையே குறிப்பதாக முனைவர் கால்டுவெல் உள்ளிட்ட அறிஞர் பலர் கருதுவர். இதே போல சிவவாக்கியரும் தம் பாடல்களில் குருவைக் குறித்துப் பாடியுள்ளார்.

'குரு இருந்து சொன்ன வார்த்தை குறித்து நோக்க வல்லிரேல்'
'குருதிருத்தி வைத்தசொல் குறித்துணர்ந்து கொள்ளுமே'
'திருத்திவைத்த சற்குருவைச் சீர்பெற வணங்கிலீர்' (Ramanathan, 2017)

சிவவாக்கியரின் இப்பாடல் வரிகளில் சொல்லப்படும் வர்ணனைகள் குருவின் வார்த்தை ஆற்றலுடையது. அவர் தம் போதனைகளால் மக்களை நல்வழிப்படுத்துகிறார் என்பதை பதிவு செய்கின்றது.

'பாவத்தை அழிக்க வெளிப்பட்ட தெய்வமே குருவாக முடியும்.' என விவிலியம் (Thiruviviliam, 2013) கூறுகிறது. இக்கருத்தை வலுப்படுத்த பாம்பாட்டிச் சித்தர் பின்வருமாறு பாடுகிறார்,

'காயம்நிலை அழியைக் கொண்டுபின்

கற்புநிலை யுள்ளிற்கொண்டு எக்காலமும் வாழும்

தூயநிலை கண்ட பரிசுத்தக் குருவின்

துணையடி தொழுது நின்று ஆடுபாம்பே! ' (Ramanathan, 2017)

இப்பாடலில் நிலையற்ற இந்த உடல் அழிந்து போவதைக் கண்டு உள்ளந் தெளிந்து மனத்தினுள்ளே நெறி தவறாமல் எக்காலமும் வாழ்கின்ற தூய நிலை கண்ட புனிதமான ஞான குருவின் திருவடியினை வணங்கி வாழக் கூறுகிறது. மேலும் பாம்பாட்டிச் சித்தர் குரு வணக்கம் என்ற பகுதியில் மெய்க்குரு, பூரண சற்குரு, எங்கள் உயிரான குரு, உண்மைக் குரு, தூய்மையான குரு, வீடுபேற்றை கண்டடைய வழி காட்டும் குரு, ஆற்றல் நிறைந்த குரு, நிலைவாழ்வை அடைந்து வாழும் வகைக்குக் காரணகுரு, வேதகுரு எனக் குருவின் குணலட்சனங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

'பாவந் தீரவென்றால் ... சற்குரு பாதமடி'

'நாலு மறைகாணா .... நற்குரு பாதமடி' (Ramanathan, 2017)

மேற்காணும் அகப்பேயரின் பாடல் வரிகள் முறையே ஒருவன் செய்த தீவினை தீர வேண்டுமெனில் சற்குருவின் பாதம் நாடி அறச்செயல் புரிந்தே ஆகவேண்டும். அதுபோல ஒருவன் முக்தி பெற வேண்டுமெனில் ஒளி குருவாய் வந்த இறைவனின் திருவடியை பற்றிக் கொள்ள வேண்டும். நான்கு மறை நூலின் முடிவிலே, அதையும் கடந்த நிலையில் ஒளிக்குருவாய் வந்த இறைவனின் திருவடியை பற்றிக்கொள்ள வேண்டுமெனக் கூறுகிறது.

'நானே உலகின் ஒளி' என்றும் 'உலகத்தின் பாவத்தை போக்கும் தேவ ஆட்டுக்குட்டி (Thiruviviliam, 2013) என்றும் விவிலியம் இயேசு பெருமானைப் பற்றிக் கூறுகிறது. இந்தத் தொடர்கள் ஒளியின் வடிவமாக வந்த அவர் உயிர்களிடையே மெய்ப்பொருளின் மீது அன்பை உண்டாக்குகிறார். அனைவராலும் வணங்கப்படும் இறைவனுடைய திருவடியைப் பற்றிக் கொள்ளும் சாதனங்களையும் கற்பிக்கிறார் என்று விளக்குகிறது.

'ஒரு மனிதனுக்கு முக்தி மட்டுமே தெய்வங்களால் கொடுக்க முடியாது. அதை அடைய மனிதன் தனது உடலை வருத்தவேண்டும். அவ்வாறு வருத்தினால் அதற்கு தக்க பலன் கிடைக்கும் என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாறு உடலை வருத்துவதற்கு தவம் அல்லது தியானம் என்று பெயர். அதைப் பழகுவதற்கு குருவின் துணை வேண்டும்.' (kamalakkannan, 2010) 'தவம் என்றால் மற்றவர்களுக்காக தன்னை அழித்துக் கொள்ளுதல் என்று பொருள்.' (Sathu chellappa, 1985) 'குரு' என்பவர் சாதாரண மனிதர் அல்லர். மனிதன் வாழ்வின் இறுதியில் வீடுபேற்றைக் கண்டடைய குருவே வழி. சித்தர்களின் குரு கோட்பாட்டுப் பாடல்களை காண்போம்.

'காரண சற்குருவினால் கசட்டைப் போக்கி' (Gnanasikamani, 2001)

'சற்குருவைத் தேடிப் போய்ச்'

'சற்குருவைத் தரிசித்து சரண்பற்றி ' (Mohan, 1995)

மேற்கண்ட அகத்தியர் பாடல்களில் அமைந்த கருத்துக்கள் இயேசு பெருமானுக்கே பொருந்துவதாகக் கருதத்தக்கன. 'வழியும், வாய்மையும், வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் (இறைவனிடம்) வருவதில்லை' (Thiruviviliam, 2013) என்று இயேசு பெருமான் கூறியுள்ளார். மக்கள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி இறைவனடி சேருவதற்கு "குரு" நாதரின் அருள் பெற வேண்டும் என சித்தர் பாடல்களும் விவிலியமும் கற்பிக்கின்றது.

 DOI: 10.34256/irjt21314

## முடிவுரை

விவிலியமும் சித்தர் பாடல்களும் ஒத்தக் கண்ணோட்டத்தில் குருக் கோட்பாட்டை விளக்கி நிற்பதைக் காணலாம். விவிலியமறையில் உலக படைப்புகள் அனைத்தையும் படைத்த இறைவன் குருவாக, அவதாரம் எடுத்து வந்து இயேசு என்ற பெயரில் மெய்மையை உணர்த்தினார் எனக் கற்பிக்கிறது. இக்கருத்து சித்தர் பாடல்களில் இறைவனே குருவாக வந்து உண்மையை உணர்த்துகிறார் என்று எதிரொலிக்கிறது. ஆக குரு வழியாக மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதே விவிலியம் மற்றும் சித்தர் பாடல்களின் முக்கியக் கோட்பாடாகக் காணப்படுகிறது.

## References


Beth Walpole, (1993) Venture of Faith, Christian Literature Society, Madras.

Deivanayagam M, (1970) Thiruvalluvar kiristhavara? Meiporul pathipagam, Chennai.

Gnanasikamani V, (2001) Wisdom of Agathiyar, gnanothayan, Chennai.

kamalakkannan. P., (2010) Philosophy of siddhar, Vanathi publication, Chennai, India.

Mc muller, The concept of Guru in Indian Religion.

Mohan, R.C., (1995) Agathiyar Wisdom, Thamarai publication, Chennai.

Ramanathan. Aru., (2017) Poets of sidhars, Prema publications, Chennai, India.

Sathu chellappa, (1985) If Need Christianity, Indian Gospel Act Team, Coimbatore, India.

Selvaraj, (1994) Siddha sinthamani, sakthisri pathipgam, Chennai.

Sivakanthan. K.R., Siddhargal thathuvamum yoga nerimuraigalum, kazhaga veliyedu, Chennai, India.

Thiruviviliam, (2013), Tamil Nadu Biblical Catechetical & Liturgical Centre, Tindivanam, India.


**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License